## <u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>

**<u>அ.வ எண்: 106/2011 வெங்கடேசன்(வாசா1) தேதி:14.10.2025</u>**

**<u>வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

பிராது 1ம்தபசில்சொத்து வாதிகளாகிய எங்கள் இருவருக்கும் பாத்தியப்பட்டது என்பது தான் எங்கள் வழக்கு என்றால் சரிதான். பிராது 2ம் ம்தபசில்சொத்து என்பது பிராதுடன் தாக்கல்செய்யப்பட்ட மாதிரிவரைபடத்தில் கண்டுள்ளபடி பிரதிவாதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம்தபசில்சொத்தின் வடபகுதி 3ம்தபசில் சொத்து என்றால் சரிதான். 2ம்தபசில்சொத்தின் தென்பகுதி 4ம்தபசில்சொத்து என்றால் சரிதான். நானும் என் சகோதரரும் கிரையம்வாங்கியசொத்தை இதுவரை பிரிக்கவில்லை. கூட்டாகதான் உள்ளது. வாசாஆ.1ல் கண்ட 4 மால் விவரங்களும் அளவீடுகளும் சரியானவை. வாசாஆ.1ல் 2வது இலக்கச்சொத்தாக சுமார் 1–1/2 செண்ட் நிலம் பாத்ரூம் கட்டுவதற்காக காலிமனையாக காட்டப்பட்டு அதில் 2/38 பாகம் எங்களுக்கு உள்ளதாக காட்டப்பட்டது என்றால் சரிதான். ஆக்கிரமிப்பு விவரங்களை கண்டறிய எங்கள் தரப்பில் இந்தவழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய மனுதாக்கல்செய்யப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரிடம் எங்கள் தரப்பில் வழங்கப்பட்ட விவரக்குறிப்பாணையில் 3வது பாராவில் சர்வேஎண்.603/1க்குரிய நகரஅளவை எண்.56க்கு மேல்புறம் மட்டும் உள்ள மந்தித்தோப்பு செல்லும் ரோட்டின் நீள அகலங்களை ஆணையர் அவர்கள் அளந்து தன் அறிக்கை மற்றும் வரைபடங்களில் குறிப்பிடவேண்டியது என் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரின் இறுதிஅறிக்கை மற்றும் வரைபடத்தை ஏற்றுக்கொள்கிறேனா என்றால் நீதிமன்ற ஆணையர் எங்களுடைய இடத்தை எதிர்தரப்பு நபர்களின் இடம் என குறிப்பிட்டுள்ளார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.